**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 13.09.2019 ((முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 2690/E/2017**

திரு மூ.நல்லுச்சாமி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உத்தமபாளையம்,
தேனி மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 19.11.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 31.12.2016 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 07.04.2017 |

******

**ஆணை**

இன்று (13.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு மூ.நல்லுச்சாமி ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி கா.ரத்தினம், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 19.11.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் சுருளிப்பட்டி கிராம நிர்வாக அலுவலருக்கு 30.08.2016 அன்று சில ஆவணங்கள் கோரி இந்திய சாட்சிய சட்டத்தின்கீழ் விண்ணப்பம் அளித்துள்ளதாகவும், எந்தவிதமான தகவலும் அளிக்கவில்லையென்றும் தெரிவித்து, அது தொடர்பாக, மேற்படி விண்ணப்பத்தைப் பதிவு செய்துள்ள பதிவேடுகளின் நகல், நடவடிக்கை எடுக்கக்கூடிய அலுவலர் விபரம், எடுக்கப்பட்ட நடவடிக்கை அடங்கிய கோப்பின் நகல், மேற்படி விண்ணப்பத்திற்கு எத்தனை நாட்களுக்குள் தகவல் தரப்பட வேண்டுமென்ற விதிமுறைகளின் நகல், தகவல் தராத அலுவலர் மீது எந்த சட்டப்பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைக் காட்டும் விதிமுறையின் நகல், மேற்படி மனுவின் மீது என்னென்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதைக் காட்டும் விதிமுறையின் நகல், மேற்படி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் விபரம், அவர் குடியிருந்துவரும் வீட்டின் மீன்சார கணக்கீட்டைப் பதிவு செய்யும் அட்டையின் நகல், அவர் எந்த தேதி முதல் பணியில் சேர்ந்துள்ளார், அவரது பணியைக் கண்காணிக்கும் அலுவலர் விபரம், அவர் அரசு பதவியில் சேரும்போது அவரின் கல்வித் தகுதி மற்றும் தற்போதைய கல்வித் தகுதி, அவரது அசையும், அசையாச் சொத்துக்கள் விபரம், தன் எல்லைக்குட்பட்ட பகுதியில் சரிவர இயங்காத அரசுப் பள்ளிகள், அரசு மருத்துவமனைகள், நூலகங்கள் பற்றிய விபரங்களை அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் அல்லது தேவையில்லை என்பதைக் காட்டும் விதிமுறையின் நகல், கிராம நிர்வாக அலுவலரின் பொறுப்பும், கடமைகளையும் அறிய அவர்களின் பணிப் பட்டியலின் நகல் என 14 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 08.12.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைச் சட்டப்பிரிவு 7(6)-ன்படி செலவுத் தொகையின்றி வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 31.12.2016 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், உத்தமபாளையம், தேனி மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 27.01.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும், இழப்பீடு வழங்க ஆணையிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 07.04.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 27.01.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாக உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேல்முறையீட்டாளரும் தான் கோரிய தகவலைப் பெற்றுக்கொண்டதாகக் கடிதம் அளித்துள்ளதாகவும் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளர் தேதியிடப்படாது ஆணையத்திற்கு

விலாசமிட்டு அளித்துள்ள கடிதம் வாயிலாக, தான் உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலரிடம் அளித்த மனுவிற்கு அனைத்து தகவல்கள் மற்றும் ஆவணங்களையும் உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலரிடம் பெற்றுக் கொண்டதாகவும், எனவே தான் தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி அளித்த மேல்முறையீட்டு வழக்கு எண்.SA 2690/E/2017-ல் உள்ள மேல்முறையீட்டு மனுவினை வாபஸ் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளது தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 2690/E/2017**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உத்தமபாளையம்,
தேனி மாவட்டம்.

**மனுதாரர்**

திரு மூ.நல்லுச்சாமி,
த/பெ. மூக்கன்,
111, 703 நடுரைஸ்மில் தெரு,
சுருளிப்பட்டி,
தேனி மாவட்டம்.

Copy to: Judgement File.
20/09/19